இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 94– திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 27 – புதன்கிழமை 13 நவம்பர் 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 94 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 27 - Wednesday 13 November 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் ‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# ஊரக வளர்ச்சித் துறையில் இணையற்ற சாதனைகள்!

## கிராமப் புற முன்னேற்றத்தில் இந்தியாவிற்கே வழிகாட்டும் மகத்தான திட்டங்கள்!

**சென்னை, நவ.13 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் ஊரக வளர்ச்சித் துறையில் இணையற்ற சாதனைகள் படைக்கப்பட்டுள்ளது. கிராமப்புற முன்னேற்றத்தில் இந்தியாவிற்கே வழிகாட்டும் மகத்தான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.**



இந்தியாவின் உயிர் அதன் கிராமப் புறங்களில்தான் உள்ளது என்றார் அண்ணல் காந்தியடிகள். கிராமப்புற மக்களில் பெரும்பாலோர் விவசாயிகள், நெசவாளர்கள், உடல் உழைப்பையே மூலதனமாகக் கொண்டு உழைக்கும் தொழிலாளர்கள் இந்த மக்களின் உழைப் பால்தான் ஏனையோர் வாழ முடிகிறது. இந்தக் கிராமப்புற மக்களின் மேம்பாட்டிற் காகக் கிராமப்புற வளர்ச்சிக்குத் தனி முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமையும் காலங்களில் எல்லாம் கிராமப் புறங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதி களை மேம்படுத்திடும் அரிய பல திட்டங் கள் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்றன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் களின் 40 மாதகால திராவிட மாடல் ஆட் சியில் கிராமப் புறங்களில் அனைத்து வச திகளையும் ஏற்படுத்துவதில் தனிக்கவனம் செலுத்திப் பல்வேறு திட்டங்கள் நடை முறைப்படுத்தப்படுகின்றன.

### கிராம ஊராட்சிகளில் தகவல் தொழில் நுட்பச் சாதனங்கள்!

கிராம ஊராட்சிகளில் போதுமான தகவல் தொழில்நுட்பக் கட்டுமானத்தை உறுதி செய்திடும் விதமாக தமிழ்நாட்டி லுள்ள அனைத்து 12,525 கிராம ஊராட்சி களிலும் கணினிகள், பிரிண்டர்கள் மற் றும் தடையில்லா மின்கலன்கள் (UPS) சாதனம் ஆகியவை நிறுவப்பட்டு ஊராட்சி அலுவலகங்களில் பயன்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளன.

### இணையதளம் வாயிலாக அரசுச் சேவைகள்!

சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, திட்ட அனுமதி, மனைப் பிரிவு அனுமதி மற்றும் கட்டட அனுமதி போன்ற குடிமக்கள் நலன் சார்ந்த அரசு சேவைகளை மக்கள் இணையதளம் வாயிலாக எளிதில் பெற உதவும் வகை யில் ஊராட்சிகளில் மின் ஆளுமைக் கான Vptax Portal நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

### கூடுதலாக இரண்டு கிராமசபைக் கூட்டங்கள்!

2022 - 2023 ஆம் ஆண்டிலிருந்து கிராம சபைக் கூட்டங்கள் தண்ணீர் தினம் (மார்ச் 22) மற்றும் உள்ளாட்சிகள் தினம் (நவம்பர் 1) ஆகிய இரண்டு நாள்களை யும் சேர்த்து ஆண்டிற்கு மொத்தம் 6 முறை நடத்தப்படுகிறது.

### ஊராட்சிகளுக்கு நிதிவரம்பு அதிகரிப்பு!

கிராம ஊராட்சிகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கும் நிதிவரம்பு ரூ.2 இலட் சம் என்பது ரூ.5 இலட்சமாகவும், வட்டார ஊராட்சிகளுக்கு ரூ.10 இலட்சம் என்பது ரூ.25 இலட்சமாகவும், மாவட்ட ஊராட்சி களுக்கு ரூ.20 இலட்சம் என்பது ரூ.50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

### மீண்டும் உத்தமர் காந்தி விருது!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் உள்ளாட்சித் துறை அமைச்சராகத் திகழ்ந்தபோது 2006ஆம் ஆண்டில் மாநி லத்தில் சிறப்பாகச் செயல்புரியும் கிராம ஊராட்சிகளுக்கு உரிய அங்கீகாரத்தினை வழங்கும் பொருட்டு உத்தமர் காந்தி விருது அளிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்திட்டம் 2021 முதல் மீண்டும் நிறுவப் பட்டுச் சிறப்பாகச் செயல்படும் கிராம ஊராட்சிகளுக்கு ரூ.10 இலட்சத்திற்கான ஊக்கத் தொகையுடன், மாவட்டத்திற்கு ஒரு கிராம ஊராட்சி வீதம் 37 கிராம ஊராட்சி களுக்கு இவ்விருது வழங்கப்படும்.

### சமூக நிறுவனங்களுக்கு விருதுத் திட்டம்!

சமூகப் பொறுப்புணர்வுடன் செயல் படும் தனியார் நிறுவனங்களை ஊக்குவிக் கும் விதமாக, சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்படும் நிறுவனங்களுக்காக (CSR) விருதினைத் திராவிட மாடல் அரசு ஏற்ப டுத்தியுள்ளது. இதன் மூலம் தனியார் நிறு வனங்கள் தங்களுடைய நிதியினையும் தொழில்நுட்பங்களையும் ஊராட்சிகளுக்கு அளித்து ஊரக வளர்ச்சிக்கு உறுதுணை புரிய ஊக்கமளிக்கப்பட்டுள்ளது.

### ஊராட்சிகளின் சிறந்த நிதி நிர்வாகத் திற்கான தமிழ்நாடு எளிமைப்படுத்தப்பட்ட ஊராட்சி கணக்குகள் திட்டம்!

ஊராட்சிகளுக்கான மாநில நிதிக் குழு மானியம் மற்றும் சொந்த வருவாய் இனங்களைப் பராமரிக்க ஒற்றை மையக் கணக்கு (SNA) மூலம் சிறந்த நிதி நிர்வா கத்தினைக் கிராம ஊராட்சிகளில் ஏற்ப டுத்தி வேலைப் பளுவினைக் குறைத்துக் கணக்குகளை எளிதாகப் பராமரித்திடும் பொருட்டு தற்போது நடைமுறைபடுத்தப் பட்டுச் செயல்பாட்டில் உள்ளது.

### ஊரகப் பகுதி சுகாதாரப் பணியாளர்கள் நலன்!

2022 - 2023 ஆம் ஆண்டிற்கென ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளில் பணியமர்த்தப்பட் டுள்ள சுகாதாரப் பணியாளர்களின் நல னுக்கான பணிகள் மேற்கொள்ளப்படு கின்றன.

### தெருவிளக்குகள், பராமரிப்பில் தானியங்கி முறை!

தெருவிளக்குகள் பராமரித்தலில் தானியங்கி முறையினைப் புகுத்திடும் வகையில் இண்டர்நெட் ஆப் திங்ஸ் (IOT) முறையில் சோதனை முயற்சியாக செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மாம் பாக்கம், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கருங்காடு ஆகிய இரண்டு ஊராட்சிகளிலும் மேற்கொள்ளப்படுகின்றன.

### ஊராட்சி பிரதிநிதிகள் பொதுமக்களுக்கு உதவிட உதவி மையம்!

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகள் மற்றும் பொதுமக்களுக்கு வழி காட்டும் வழிமுறையாக (155340) என்ற எண்ணுடன் ஓர் உதவி மையம் (Help Desk) இயக்குநரகத்தில் 24X7 என்ற வகையில் முழுநேரம் செயல்படும் வண் ணம் அமைக்கப்பட்டுள்ளது.

### நம்ம கிராமசபை புதிய செயலி!

கிராமசபை நிகழ்வுகளைக் கண் காணித்திட துறையானது “நம்ம கிராம சபை” என்கிற புதிய கைபேசி செயலியை அறிமுகம் செய்துள்ளது.

### மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்!

2021 முதல் மூன்று ஆண்டுகளிலும் பெண்கள் 86.26 சதவீதத்திற்கும், மாற்றுத் திறனாளிகள் 2,95,664 பேரும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினரில் 29.59 சதவீதத்தினரும் பயன் பெற்றுள் ளனர்.

**★ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிதிட்டத்தின்கீழ் ரூ.40,968.68 கோடியில் 10,14,959 குடும்பங்கள் பயன்!**

**★ ரூ.10,584 கோடியில் 19,450 கி.மீ. சாலைகள் மற்றும் 425 பாலங்கள் !**

**★ ரூ.3958.87 கோடியில் 3,29,906 ஊரகக் குடியிருப்புகள் !**

**★ ரூ.3958.87 கோடியில் கான்கிரீட் மேல்கூரைகள் அமைப்பு !**

**★ ரூ. 594 கோடியில் ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் பேருந்து நிலையங்கள் !**

**★ ரூ.262 கோடியில் சமத்துவபுரங்கள் சீரமைப்பு !**

**★ ரூ.3500 கோடியில் 1,00,000 புதிய கான்கிரீட் வீடுகள் !**

**★ ரூ.50 கோடியில் 8 புதிய சமத்துவ புரங்கள் !**

**★ 1,00,466 ஊரக குடியிருப்புகள் ரூ. 832/ கோடி மதிப்பீட்டில் பழுது நீக்க பணி மேற்கொள்ளுதல்**

**★ ரூ.2,808 கோடியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் !**

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

---

## உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக

# சஞ்சீவ் கன்னா பதவியேற்பு!

### குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பதவி பிரமாணம் செய்து வைத்தார்!



*புதுடெல்லி, நவ.13 -*

*உச்சநீதிமன்றத்தின் 51வது தலைமை நீதிபதியாக சஞ்சீவ் கன்னா பதவியேற்றுக் கொண் டார். அவருக்கு, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.*

*உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த டி.ஒய். சந்திரசூட் ஓய்வு பெற்றார். முன்னதாக மூத்த நீதிபதியான சஞ்சீவ் கன்னாவை அடுத்த தலைமை நீதிபதியாக நியமிக்க அவர் பரிந்துரை செய்திருந்தார். அதனை ஏற்று, புதிய தலைமை நீதிபதி யாக சஞ்சீவ் கன்னாவை கடந்த மாதம் 24ந் தேதி ஒன்றிய அரசு நியமித்தது.*

*இந்நிலையில், நாட்டின் 51வது தலைமை நீதிபதியாக சஞ்சீவ் கன்னா நேற்று முன்தினம் பதவியேற்றுக் கொண்டார். குடியரசு தலைவர் மாளிகையில் நடந்த நிகழ்ச்சியில் அவருக்கு குடியரசு தலைவர் திரவுபதி முர்மு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.*

*தலைமை நீதிபதியாக சஞ்சீவ் கன்னா பதவியேற்றுக் கொண்ட நிகழ்ச்சியில், ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், பிரதமர் மோடி, ஒன்றிய அமைச்சர் கள் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் கலந்து கொண்ட னர். உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா, அடுத்த ஆண்டு மே மாதம் 13ம் தேதி வரை அப்பதவி யில் நீடிப்பார். டெல்லி பல்கலைக்கழகத்தில் சட்டப் படிப்பை முடித்த சஞ்சீவ் கன்னா, 2005ஆம் ஆண்டு டெல்லி உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதியாக நியமிக்கப் பட்டார். கடந்த 2019ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற நீதிபதி யாக அவர் பதவி உயர்வு பெற்றார்.*

---

## குழந்தைகளின் கல்விச் செலவை அரசே ஏற்கும் என அறிவிப்பு!

# 24 மணி நேரத்தில் கோரிக்கையை நிறைவேற்றிய முதல்வர்!

### பட்டாசுத் தொழிலாளர்கள் உருக்கம்!

சிவகாசி, நவ. 13 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விருதுநகர் மாவட்டத்தில் 2 நாள் கள ஆய்வு மேற்கொண்டார். விருதுநகர் அருகே கன்னிச்சேரி புதூரில் உள்ள பட்டாசு ஆலையில் ஆய்வு மேற்கொண்டார். அங்கு பட் டாசு உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண் டிருந்த பெண் தொழிலாளர்களை சந்தித்து, பட்டாசு உற்பத்தி குறித்தும் குடும்ப வருமானம் குறித்தும் கேட்டறிந்தார்.

அப்போது பெண் தொழிலாளி இசக்கியம்மாள், “பட்டாசு விபத்தில் எங்களுக்கு ஏதாவது நடந்தால் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றது. எங்களது குழந்தைகள் படிப்பிற்கும் வாழ்வாதாரத்திற்கும் ஏதாவது உதவி செய்ய வேண்டும்” என கோரிக்கை வைத்தார். அதற்கு, “உரிய நடவடிக்கை எடுக்கப்படும். நம்பிக்கையுடன் இருங்கள்” என முதல்வர் உறுதியளித்தார்.

பெண் தொழிலாளி கோரிக் கையை கூறி 24 மணிநேரம் கூட ஆகாத நிலையில் பட்டாசு தொழிற் சாலை விபத்துகளில் உயிரிழக்கும் தொழிலாளர்களின் குழந்தை களுக்கு உயர்கல்வி வரையிலான அனைத்து கல்வி செலவுகளையும் அரசே ஏற்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் அறிவித்தார். இந்த அறிவிப்பு 5 லட்சம் பட்டாசு தொழிலாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அவர்கள் முதல்வருக்கு நன்றி தெரிவித்து உள்ளனர்.

பட்டாசு தொழிலாளி இசக்கியம் மாள் கூறுகையில், **“10 ஆண்டுகளாக பட்டாசு ஆலை வேலைக்கு செல்கின் றேன். தமிழக முதல்வரை நேரில் பார்த்தது மகிழ்ச்சியாக இருந்தது. விபத்தின்போது எங்களுக்கு ஏதாவது ஆகிவிட்டால் எங்களது பிள்ளைகள் கஷ்டப்படுகின்றனர் என முதல்வரிடம் கூறினேன். பட்டாசு தொழிலாளர்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு எங்க ளது கோரிக்கையை ஏற்று, தொழிலா ளர்களின் குழந்தைகளுக்கு உயர் கல்வி வரையிலான அனைத்து கல்வி செலவுகளையும் அரசே ஏற்கும் என தமிழக முதல்வர் அறிவித்தது மகிழ்சி யாக உள்ளது.**

**எனது கோரிக்கையை முதல்வர் அறிவிக்கும்போது சிவகாசியில் இருந் தேன். முதல்வர் உடனடியாக அறிவித் தது இன்ப அதிர்ச்சியாக இருந்தது. 5 லட்சம் பட்டாசு தொழிலாளர்கள் சார் பாக நன்றியை தெரிவித்துக்கொள் கின்றோம்”** என்றார்.

### நீண்டநாள் பிரச்சினைக்கு தீர்வு!

தமிழ்நாடு பட்டாசு மற்றும் கேப் வெடி சங்கத்தின் உற்பத்தியாளர் (டான்பாமா) தலைவர் சோனி கணேசன் கூறும்போது,

“முதல்வர் அறிவிப்பு மூலம் விபத் தில் உயிரிழக்கும் பட்டாசு தொழிலா ளர்கள் குழந்தைகளின் வாழ்வாதா ரத்திற்கு தீர்வு ஏற்பட்டுள்ளது. விபத்தி னால் பாதிக்கக்கூடிய மக்களுக்கு அவர்களுக்கான தொடர் வாழ்வாதா ரம் பாதிக்கப்படுகின்றது. அவர்களுக்கு ஏதாவது செய்து கொடுக்க வேண்டும் என்பது எங்களது நீண்ட நாள் கோரிக்கையாகும். இதுகுறித்து கலெக்டரிடமும் கோரிக்கை வைத்தி ருந்தோம்.

இந்த கோரிக்கையை முதல்வரி டம் கொண்டு செல்வோம் என்று கலெக்டர் எங்களிடம் தெரிவித்திருந் தார். வெடி விபத்தில் உயிரிழக்கும் தொழிலாளர்களின் குழந்தை களுக்கு உயர்கல்வி வரையிலான அனைத்து கல்வி செலவுகளையும் அரசே ஏற்கும் என்று தமிழக முதல் வர் அறிவித்துள்ளார். இதற்கு டான் பாமா சார்பாக நன்றியை தெரிவித் துக் கொள்கின்றோம்” என்றார்.

### எனது வாழ்நாளில் மறக்க முடியாத நாள்!

பட்டாசுத் தொழிலாளி திருமுருகன் கூறுகையில், “தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்னிடம் வந்து எந்த ஊரில் இருந்து வருகின் றீர்கள் என கேட்டார். நான் அதற்கு, ராமலிங்கபுரத்திலிருந்து தினமும் வந்து செல்கின்றேன் என்று கூறி னேன். வீட்டில் உள்ளவர்கள் குறித்து நலம் விசாரித்தார்.

வேலையின் போது பாதுகாப்பாக இருக்கின்றீர்களா? என கேட்டார். மிகுந்த பாதுகாப்புடன் வேலை செய்கின்றோம் என்று அவரிடம் கூறினேன்.

போதிய சம்பளம் கிடைக்கின்றதா, உங்களுக்கு வேற என்ன வசதி வேண்டும் என்று கேட்டார். உங்கள் ஆட்சியில் எல்லாமே நல்லபடியாக நடக்கின்றது என கூறினேன். முதல் வர் திடீரென்று என்னிடம் வந்து நலம் விசாரித்தது எனக்கு இன்ப அதிர்ச்சி யாக இருந்தது. என் வாழ்நாளில் இந்த நாளை மறக்க முடியாது” என் றார்.